1968 ஆகஸ்ட் 26]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

* 150 வினு.—**திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் (**Multipurpose Co-operative Societies**) எண்ணிக்கை என்ன ?

(இ) வாணிபச் சங்கங்களின் (**Marketing Societies**) எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) 8,911 (எட்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினென்று).

(இ) 133 (நூற்று முப்பத்தி மூன்று).

திரு. பெ. மலேச்சாமி : தலேவர் அவர்களே, மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்ருக இணைப்பதால் என்ன பயனை அரசு எதிர் பார்க்கிறது ? இந்தக் கொள்கையினை எல்லாச் சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கங் கள், மல்டி-பர்பஸ் கோவாபரேடிவ் சொஸைடீஸ், இவைகளெல்லாம் அங்கே யுள்ள ஜனத்தொகையில் மூவாயிரம் பேருக்காவது பயன்படவேண்டும். இரண்டாயிரம் ஏக்கரா நிலங்களுக்காவது பயன்படவேண்டும். ஆண்டொன் றுக்கு இரண்டு இலட்ச ரூபாயாவது கடன் கொடுக்கவேண்டும் ஆண் டொன்றுக்கு நிகர இலாபம் 3,200 ரூபாயாவது வரவேண்டும் என்ற அடிப்படையிலேதான் தோற்றுவிக்கப்படுகின்றன. ஆங்காங்கு தேர்ந்தெடுக் கப்பட்ட தலேவர்கள் இவற்றை நடத்தி வருகின்ருர்கள். இவைகளெல்லாம் 'வயபிள் யூனிட்ஸ்' ஆக இருக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய அங்கத் தினர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்திற்கும், நடைமுறைச் செலவுக்கும் ஒத்துவரக்கூடிய அளவில், 'வயபிள் யூனிட்' உண்டாக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் முடிவு செய்து, சரியாக நடைபெருத இரண்டு மூன்று சொஸைட்டிகளேயும், 'வயபிள் யூனிட்ஸ்'ஸாக இல்லாத கூட்டுறவு சங் கங்களேயும் இணைத்து, 'வயபிள் யூனிட்டாக' நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அது அவர்களுக்கும் நல்லது. நஷ்டம் இல்லாமல் நடப்ப தற்கும் உதவியாக இருக்கும்.

Post of Director of Town Planning.

* 151 Q.—Thiru S. **RAMACHANDRAN :** Will the **Hon. the** Minister for Public Health be pleased to state—

(*a*) Whether the present post of Director of Town **Planning** is borne on the I.A.S. Cadre ;

(*b*) if so, from what date ; and

(*c*) whether there is any proposal to appoint a non-I.A.S. technical officer to this post ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை இல்லே.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலேவர் அவர்களே, இந்த டவுன் பிளா னிங் துறை, பெரும்பாலும் பொறியியல் வல்லுனர்கள் இருந்து பா யாற்றக் கூடிய துறையாகும். அதனுடைய தலேவராக அந்தத் துறையி லேயிருந்து அனுபவம் பெற்ற பொறியியல் வல்லுனரையே போடுவதற்குப் பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருப்பதனுல் அவருடைய திறமை யும் வீணுக்கப்படுகிறது, கீழே இருக்கின்றவர்களுடைய வாய்ப்பும் கெடு கிறது, ஆகவே இதை மறுபரிசீலனே செய்ய சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த டவுன் பிளானிங் ஆபீசுக்கு முனிசிபாலிட்டியிலிருந்தோ, மற்ற இடங்களிலிருந்தோ, ஏதாவது பிளானிங் சம்பந்தப்பட்ட தீர்மானங்களைப் போட்டு அனுப்பினால் வருஷக் கணக்கிலே ஊறுகாய்ப் பானையிலே போட்ட மாதிரி.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டெல்லாம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : குற்றச்சாட்டு அல்ல. உடனுக்குடனே அதன் பேரில் ஒன்று 'உண்டு' அல்லது 'இல்லை' என்ற அளவிற்கு எந்த பதிலையும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு உள்ளது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, உடனுக்குடனே துரித நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு டவுன் பிளானிங் ஸ்கீமை அப்ரூவ் செய்ய வேண்டுமென்றால், அது பல கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டங்களைத் தாண்டுவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆனால், நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, கோவை போன்ற இடங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தத் திட்டத்தில் காலதாமதம் இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : In the matter of promotion in this department, are the Government aware of the fact that when the vacancy of a Deputy Director of Town Planning arose, one who was far junior and who did not deserve promotion, had been promoted in spite of the fact that there were many senior Assistant Directors who deserved promotion on questions of merit ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : This supplementary question does not arise from the main question. My hon. Friend may put a separate question.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கருச்சிதைவுக்கான நவீன சாதனங்களைப் பற்றியோ, மற்றவற்றைப் பற்றியோ இந்திய அரசு மாநில அரசிடம் ஏதேனும் யோசனை கேட்டதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது, இனி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற மூலக் கேள்விக்குரியது.

கரு உறிஞ்சும் குழாய்

*152 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருச் சிதைவுக்காக உபயோகப்படுத்த புதிதாக ரஷ்யாவில் கண்டு பிடித்துள்ள நவீன 'கரு உறிஞ்சும் குழாய்'. நமது மாநிலத்திற்கு உபயோகப் படுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இப்பொழுது இல்லை.

(இ) எழாது.